ஆண்டு பட்டிகை வழக்கு எண்.26/2024

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 26/2024 LW– 1 PW– 1

| | |
|---|---|
| Name | : பொன்னுச்சாமி ( புகார்தாரர்) |
| Father's/Husband's Name | : மாயழகன் |
| Village | : ஒடுகம்பட்டி |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 54/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04th day of January 2025

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் 2:02 P.M. - 2:21 P.M.

( 1. முதல் 4 எதிரிகள் ஆஜர், எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சி மனு எண்.1316/2024 ன் கீழ் அழைக்கப்பட்டு சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை)**

3. நான் சாத்தாம்பாடி ஊரைச் சேர்ந்தவர் என்றால் சரிதான். நான் திருமணத்திற்கு பிறகு ஒடுகம்பட்டியில் குடியிருக்கிறேன் என்றால் சரிதான். அங்கு எனக்கு உறவினர்கள் நிறைய உள்ளனர் என்றால் சரிதான். எனக்கு எழுதப் படிக்கத் தெரியாது. பைப் லைன் இழுப்பது சம்பந்தமாக எனக்கும், என்னுடைய மைத்துனர் மனைவி சின்னப்பொண்ணு என்பவருக்கும் முன் விரோதம் உள்ளது என்றால் சரிதான். புகாரை நான் கொடுக்கவில்லை. புகாரை யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. அ.சா.2 அடைக்கம்மாள் என் மனைவி. சாட்சி 3 உமாமகேஸ்வரி எனது மகள் என்றால் சரிதான். சாட்சி 4 சந்திரன் எனக்கு தம்பி முறை என்றால் சரிதான். சாட்சி 5 முருகேந்திரன் என் மகன் என்றால் சரிதான்.

4. சாட்சி 6 சின்னக்காளை மற்றும் சாட்சி 7 பெரியகருப்பன் என் மச்சான் என்றால் சரிதான். நானும், ஆஜர் எதிரிகளும் அரசு வழங்கிய நிலத்தில்தான் குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான். என்னுடைய வீட்டிற்கு முன்பு முன்னோடியான் கோவில் உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கும், எதிரி முத்துக்கிருஷ்ணன் வீட்டிற்கும் நடுவில் 5 அடி சந்து உள்ளது என்றால் சரிதான். குட்டுப்பட்டி – ஒடுகம்பட்டி ரோடு கிழமேலாக உள்ளது என்றால் சரிதான். வடக்கிலிருந்து தெற்கு நோக்கி சிமிண்ட் ரோடு செல்கிறது என்றால் சரிதான். குட்டுப்பட்டி – ஒடுகம்பட்டி ரோட்டின் முக்கில் சோலைமலை வீடு மற்றும் அதனை அடுத்து சின்னப்பொண்ணு வீடு உள்ளது என்றால் சரிதான். என் வீட்டிற்கு பின்னால் சண்முகவள்ளி வீடு உள்ளது.

5. சிமிண்ட் ரோட்டிற்கு இருபுறமும் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். குட்டுப்பட்டி – ஒடுகம்பட்டி ரோட்டில் சந்தனபாபு வீடு மெயின் ரோட்டில் உள்ளது என்றால் சரிதான். அவரது வீட்டிற்கு பின்புறம் பிரேம்குமார் வீடு உள்ளது என்றால் சரிதான். தென்புறம் உள்ளது. முன்னோடியான் கோவிலைச் சுற்றி கம்பி வேலி போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 20ம் தேதியன்று நான் குடிபோதையில் இரவு சுமார் 10.30 மணியளவில் எனக்கும், என் மைத்துனர் மனைவிக்கும் உள்ள முன் விரோதத்தை மனதில் வைத்தும், மேலும் அவரது மகனை ஆஜர் எதிரிகள் கண்டுபிடித்து கொடுத்ததாலும் எதிரிகள் மீது முன் விரோதம் கொண்டு எதிரிகளை அசிங்கமாக பேசினேன் என்றால் சரியல்ல. அதற்கு அவர்கள் மனநலம் குன்றிய நபரின் அம்மா சொன்னதால்தான் நாங்கள் அழைத்து வந்தோம் என்று சொன்னார்கள் என்றால் சரியல்ல.

6. நீ யாருடா, இதை சொல்வதற்கு என்று கூறி, கத்தியை எடுத்து சந்தனபாபுவை இடது விலாவிலும், பிரேம்குமாரை இடது முழங்கையிலும் மற்றும் முத்துக்கிருஷ்ணனை நெஞ்சில் கத்தியால் குத்தி ரத்தக் காயம் ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. அதை தடுக்க வந்த என் மனைவியையும் நான் வயிற்றில் குத்தி

ரத்தக் காயம் ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. மேலும், யாரும் அருகில் வந்தால் குத்திவிடுவேன் என மிரட்டிவிட்டு சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. என் மனைவிக்கு என்னால் ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி என் ஜாதி பெரியவர்களை வைத்து எதிரிகள் கொடுத்த வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக பொய்யாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. எதிரிகள் புகார் கொடுத்து என் மீது ஒரு வழக்கு நடக்கிறது என்றால் சரிதான்.

7. பைப் லைன் இழுப்பது சம்பந்தமாக எதிரிகளுக்கும், எனக்கும் தகராறு, சண்டை சச்சரவு இல்லை என்றால் சரிதான். ஆஜர் எதிரிகளுக்கும், இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

M.Nallakannan., B.Com., B.L.,

Digitally signed by M.Nallakannan., B.Com., B.L.,
Date: 2025.01.04 17:42:36 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.26/2024

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 26/2024 LW– 2 PW– 2

Name : அடைக்கம்மாள் (கண்ணுற்ற, காயமுற்ற சாட்சி)

Father's/Husband's Name : பொன்னுச்சாமி

Village : ஒடுகம்பட்டி

Taluk : நத்தம்

District : திண்டுக்கல்

Age : 45/2025

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04th day of January 2025

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் 2:22 P.M. - 2:37 P.M.

( 1. முதல் 4 எதிரிகள் ஆஜர், எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சி மனு எண்.1316/2024 ன் கீழ் அழைக்கப்பட்டு சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை)**

3. எங்கள் வீட்டிற்கு அருகில் எங்கள் உறவினர்கள் இருக்கிறார்கள் என்றால் சரிதான். எங்கள் வீட்டிற்கும், சின்னப்பொண்ணு வீட்டிற்கும் இடையில் முன்னோடியான் கோவில் உள்ளது என்றால் சரிதான். முத்துக்கிருஷ்ணன் வீடு எங்கள் பக்கத்து வீடு என்றால் சரிதான். அ.சா.1 என் கணவர் என்றால் சரிதான். சாட்சி 3 உமாமகேஸ்வரி எனது மகள் என்றால் சரிதான். சாட்சி 4 சந்திரன் என் கொழுந்தன் என்றால் சரிதான். சாட்சி 5 முருகேந்திரன் என் மகன் என்றால் சரிதான். என் மகள் மணப்பச்சேரியில் உள்ளார். என் மகன் கோயம்புத்தூரில் உள்ளார். சாட்சி 6 சின்னக்காளை என் அண்ணன், மற்றும் சாட்சி 7 பெரியகருப்பன் என் தம்பி என்றால் சரிதான். எங்களுக்கும், என் தம்பி மனைவி சின்னப்பொண்ணுவிற்கும் பைப் லைன் இழுப்பது சம்பந்தமாக முன் விரோதம்

இருந்தது என்றால் சரிதான். 20ம் தேதியன்று என் கணவர் குடிபோதையில் இரவு சுமார் 10.30 மணியளவில் என் கணவர், முன் விரோதத்தை மனதில் வைத்து, மேலும் என் தம்பி மகனை ஆஜர் எதிரிகள் கண்டுபிடித்து கொடுத்ததாலும் எதிரிகள் மீது முன் விரோதம் கொண்டு எதிரிகளை அசிங்கமாக என் கணவர் பேசினார் என்றால் சரியல்ல. அதற்கு அவர்கள் மனநலம் குன்றிய நபரின் அம்மா சொன்னதால்தான் நாங்கள் அழைத்து வந்தோம் என்று சொன்னார்கள் என்றால் சரியல்ல.

4. நீ யாருடா, இதை சொல்வதற்கு என்று கூறி, கத்தியை எடுத்து சந்தனபாபுவை இடது விலாவிலும், பிரேம்குமாரை இடது முழங்கையிலும் மற்றும் முத்துக்கிருஷ்ணனை நெஞ்சில் கத்தியால் குத்தி என் கணவர் காயம் ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. அதை நான் தடுக்க வந்த போது என் கணவர் என்னையும் வயிற்றில் குத்தி ரத்தக் காயம் ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. எதிரிகள் கொடுத்த புகாரில் என் கணவர் மீது வழக்கு உள்ள விபரம் எனக்கு தெரியாது. மேற்படி விபரம் எனக்கு தெரியும் என்றும், அதனை மறைத்து என் கணவரை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் நத்தம் மருத்துவமனையில் இருந்தபோது போலீசார் என்னை விசாரித்தனர். நான் நத்தம் மருத்துவமனையில் இருந்தபோது மயக்கத்தில் இருந்தேன். மதுரைக்கு செல்லும்போதுதான் நினைவு வந்தது.

5. போலீசார் விசாரணையில் என்னை 5 நபர்கள் தாக்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதிரிகள் என்னையும், என் கணவரையும், மகளையும் அடித்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும், இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. என் கணவர்தான் என்னைக் காயப்படுத்தினார் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

M.Nallakannan., B.Com., B.L.,

Digitally signed by M.Nallakannan., B.Com., B.L.,
Date: 2025.01.04 17:42:42 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.26/2024

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 26/2024 LW– 3 PW– 3

| | | |
|---|---|---|
| Name | : | உமா மகேஸ்வரி (கண்ணுற்ற சாட்சி) |
| Father's/Husband's Name | : | முருகன் |
| Village | : | மணப்பச்சேரி |
| Taluk | : | கொட்டாம்பட்டி |
| District | : | மதுரை |
| Age | : | 31/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 4th day of January 2025

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் 2:38 P.M. - 2:47 P.M.

( 1. முதல் 4 எதிரிகள் ஆஜர், எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சி மனு எண்.1316/2024 ன் கீழ் அழைக்கப்பட்டு சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை)**

3. நான் மணப்பச்சேரியில் குடியிருந்து வருகிறேன். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் சொன்ன தேதியில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. சம்பவ நாளில் நான் மணப்பச்சேரியில் இருந்தேன் என்றால் சரியல்ல. அது என் பெற்றோர் வீடு. அங்குதான் இருந்தேன். என் அம்மா காயம்பட்ட தகவல் கேள்விப்பட்டுதான் ஊருக்கு வந்தேன் என்றால் சரியல்ல. சம்பவ சமயத்தில் அங்குதான் இருந்தேன். போலீசார் என்னை நத்தம் மருத்துவமனையில் விசாரித்தனர். நான்தான் நத்தம் மருத்துவமனையிலும், மதுரை மருத்துவமனையிலும் என் அம்மாவுடன் இருந்தேன் என்றால் சரிதான். சந்தனபாபு, என் அம்மாவை அசிங்கமாக பேசியதாக போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன்.

4. சந்தனபாபு என் அப்பாவை குத்த முற்பட்டபோது நானும், என் அம்மாவும் தடுத்தோம் என்றும், அப்போது சந்தனபாபு என் அம்மாவை குத்திவிட்டார் என்ற விபரத்தை போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். போலீசார் விசாரணையில் காயம் யாரால் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது என்று நான் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எங்களுக்கும், எங்கள் அத்தை சின்னப்பொண்ணுவிற்கும் பைப் லைன் இழுப்பது சம்பந்தமாக முன் விரோதம் இருந்தது என்றால் சரிதான். மனநலம் குன்றிய நபரை அழைத்து வந்ததால் முன் விரோதம் கொண்டு என் அப்பாதான் எதிரிகளை காயப்படுத்தினார் என்றும், அதை தடுக்க வந்த என் அம்மாவையும் காயப்படுத்தினார் என்றால் சரியல்ல. என் அப்பாவை காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

M.Nallakannan., B.Com., B.L.,
Digitally signed by M.Nallakannan., B.Com., B.L., Date: 2025.01.04 17:42:48 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்